සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**
Sabaragamuwa Provincial Department of Education

**දෙවන වාර පරීක්ෂණය 2018** — **11 ශ්‍රේණිය**
**இரண்டாம் தவணைப் பரீட்சை 2018** — **தரம் 11**
**Second Term Test 2018** — **Grade 11**

**දෙමළ භාෂාව හා සාහිත්‍යය II**
**தமிழ் மொழியும் இலக்கியமும் II**
**Tamil Language & Literature II**

**පැය දෙකයි**
**இரண்டு மணித்தியாலம்**
***Two hours***

*கவனிக்க வேண்டியவை*

- *எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடையைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக*
- *இவ்வினாக்களுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்*

1. சுருக்கமான விடை தருக

(I) பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக
" கோத்த சிந்தனையோ டேகி யதில் "

(II) " எனக்குப் பெரிய வெட்கமாப் போச்சு " என்ற பேச்சு வழக்கு வாக்கியத்தை எழுத்து வழக்குக்கு மாற்றி எழுதுக.

(III) 'வெங்கதி ரோன் தானும் விதர்ப்பள திருமட்ந்தை மங்கல நாள் காண வருவான் போல' இதில் குறிப்பிடப்பட்டுள்ள அணி யாது?

(IV) வாடை , சோளம் , கச்சான் , கொண்டல் இவை எதனை உணர்த்துகின்றன.

(V) கழுத்துக் கொடுத்தல் என்னும் மரபுத் தொடர் குறிக்கும் பொருள் யாது?

(VI) 'மெல்லிய மேகத் திரைக்குள் மறைந்திடும் வெண்ணிலாவே' இப்பாடலடியிலுள்ள எழுவாய் பயனிலையை எடுத்துக் காட்டுக.

(VII) பின்வரும் வாக்கியத்துக்கு மிகப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இட்டு அதனை மீண்டும் எழுதுக.
நான் வளர்த்த நீதானா அல்லது வேறொரு பேர் வழியா? நீயும் வேறுபட்டாயோ

(VIII) பின்வரும் வாக்கியத்தின் தலைமைத் தொடரையும் சார்புத் தொடரையும் குறிப்பிடுக
ஆகா! இவ்வுலகமெல்லாம் அழகின் சோதி! ஏன கவிஞர் பாடினார்

(IX) பின்வருவற்றுள் காரணம் சிறப்பும் பெயர்களைத் தெரிவு செய்க.
பறவை , கிளி , காதணி , தங்க வளையல் , வளையல்

(X) பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவை நீக்கி வாக்கியத்தை மீண்டும் எழுதுக.3
நீண்ட காலமாக கவனிக்கப்படாமற் தோட்டம் காடாகக் களைகள் வளர்த்து காணப்பட்டன.

2. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்ய விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(i) இன்று எமது நாட்டில் வருடா வருடம் வெள்ளப் பெருக்கினால் பாரிய அழிவு ஏற்பட்டு வருகின்றது. இவ்வாறு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு மக்கள் பெரிதும் அவதியுறுகின்றனர். வெள்ளப் பெருக்குகள் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் நகர்ப்புறங்களில் நீர்வடிகாலமைப்பு ஒழுங்கின்மையே ஆகும். எனவே இதனைச் சரியான விதத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது தொடர்பான ஒரு **விளக்கக் கட்டுரை**

(ii) வைத்தியத் தொழில் என்பது கடவுள் சேவைக்குச் சமமானது. எமது நாட்டில் அரச , தனியார் வைத்தியசாலைகளில் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் இங்கு சேவை சில வைத்தியர்களால் காப்பாற்றப்படுகின்றன. எனினும் சில வைத்தியர்கள் இப்புனிதமான தொழிலைத் துஷ்பிரயோகம் செய்கின்றனர். சேவை மனப்பான்மையுடனும் அர்ப்பணிப்புடனும் கடமையாற்ற வேண்டிய கடப்பாடு இவர்களுக்குண்டு எனும் கருத்துப்பட ஒரு **மேடைப் பேச்சு**

(iii) இன்று அதிகரித்து வரும் வீதி விபத்துக்களுக்கு முக்கிய காரணம் பாதசாரிகள் எனக் கூறும் ஒருவருக்கும் இல்லை வீதி விபத்துக்களுக்கு முக்கிய காரணம் சாரதிகளே என்று கூறும் ஒருவருக்குமிடையே ஓர் **உரையாடல்**

(iv) படிப்பில் கெட்டிக்காரனான முகுந்தன் தன் நண்பர்களின் தூண்டுதலால் வெளிநாடு சென்றான் அங்கு சென்ற போது. தன்னைப் போன்ற பல இளைஞர்கள் அவஸ்த்தைப்படுவதைக் கண்டான். தனக்கும் சரியான தொழில் கிடைக்காத போது. தான் தாய் நாட்டின் அருமை புரிந்தது. ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்தான்……… என்ற கருவை மையமாக வைத்து ஒரு **சிறுகதை**

3. பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

உயிர்களின் சிறப்பில் உணர்தலும் அறிதலும் இன்பமும் துன்பமும் எல்லாச் சுவைகளும் உணர்வில் எழுவன நினைப்பு , எண்ணம் , சூழ்ச்சி , துணிவு , தூண்டுதல் விலக்குதல் போன்றன. யாவும் அறிவின் பாற்பட்டன. பொறிகளின் துணையால் உணர்ச்சி நிகழும் அறிவின கருவியால் உறுதுணையாய் அமைவன. புலன்கள் எனப்படும். பொறியால் உணர்வும் புலனால் அறிவும் முறையே வினைப்படும். அறிவும் உணர்வும் அகத்தில் வளர்வன. அவ்விரண்டல்லால் வாழ்வில் ஒன்றில்லை ஆக்கமும் கேடும் , இன்பதுன்பங்களும் , நுகர்வதும் , தவிர்வதும் , இந்த ஆக்கத்திறம் இரண்டையும் பொறுத்தவை. அவற்றின் ஆக்கம் பெருக்கும் கருவி எனப்படும். தொழில் இல்லாதிருப்பது அழிவினில் முடியும். வளர்தலும் தளர்தலும் தொழிலின் இரு திறம். புறத்தில் உடல் உறுப்புக்களை வளர்க்க உணவு உதவுவது போல , அக உறுப்பாம் உறுப்பாம் உணர்வுகளை வளர்க்கும் கருவி கல்வியே. கல்வியால் கலைகளான காவியம் , ஓவியம் இயல் , இசை வளரும். அறிவின் பகுதி பல திறப்படலாம். பகுத்தறிவு , சிந்தனை , சீர்தூக்கல் சூழ்ச்சி துணிவு போல பல திறப்படும். அவற்றுள் ஒவ்வொன்றையும் வகுத்து நிறுத்து , தொகுத்து முறைப்படுத்த நூல்கள் துணையாகும்.

4. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து. அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களும் பூரண வாக்கியங்ளில் விடை எழுதுக.

தமிழ்மொழியில் வந்து கலந்துள்ள வேற்று மொழிச் சொற்களும் ஆரிய மொழியில் இருந்து வந்து கலந்தவையே எண்ணிக்கையில் அதிகமாகும் தமிழ் மொழியில் பன்னிரண்டு உயிரும் பதினெட்டு மெய்யுமாக முப்பது முதலெழுத்துக்கள் உள்ளன. ஆரிய மொழியிலோ பதினாறு உயிரும் முப்பத்தேழு மெய்யுமாக ஐம்பது மூன்று எழுத்துக்கள் உள்ளன. இவ்வெழுத்துக்களில் உயிரெழுத்துக்களில் பத்தும் மெய்யெழுத்துக்களுட் பதினைந்துமாக இருபத்தைந்து எழுத்துக்கள் ஆரியத்துக்கும் தமிழுக்கும் பொதுவானவை. உயிரெழுத்துக்களுள் ஆறும் மெய்யெழுத்துக்களுள் இருபத்திரண்டுமாக இருபத் தெட்டு எழுத்துக்கள் ஆரியத்துக்குச் சிறப்பானவை ஆரியத்துக்கும் தமிழுக்கும் பொதுவெழுத்தாலாகி விகாரமின்றி தமிழில் வழங்கும் வடச்சொல் தற்சமம் எனப்படும். ஆரியத்துக்கேயரிய சிறப்பெழுத்தாலும் பொதுவும் சிறப்புமாகிய இருவகை எழுத்தாலுமாகி விகாரம் பெற்று தமிழில் வழங்கும் வடசொல் தற்பவம் எனப்படும். ஆரிய மொழிச் சொற்கள் தமிழ் நடை பெற்றுவரும் போது அவை வடசொல் எனப்படும்

(I) தமிழில் கலந்துள்ள சொற்கள் கூடுதலானவை எம்மொழியில் இருந்து வந்து கலந்துள்ளன?

(II) வடசொல் என்றால் என்ன?

(III) தமிழிலுள்ள முதழெழுத்துக்கள் எத்தனை?

(IV) ஆரியத்தில் மொத்தமாக எத்தனை எழுத்துக்கள் உள்ளன?

(V) தற்பவம் என்றால் என்ன?

5. ஐக்கிய நாடுகள் தாபனம் ஒக்ரோபர் பதினைந்தாம் திகதியை உலக கைகழுவுதல் தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது. சவர்க்காரத்தைப் பயன்படுத்திக் கைகழுவும் பழக்கத்தை உலகளாவிய ரீதியில் ஊக்குவிப்பதே இத்தினத்தின் நோக்கமாகும் இப்பழக்கம் நமது ஆரோக்கியத்துக்கு இன்றியமையாதது எனும் கருத்தை வலியுறுத்தி 100 சொற்களில் துண்டுப் பிரசுரம் ஒன்று எழுதுக.

அல்லது

உமது பிரதேசத்தில் வேலை செய்து கொண்டிருந்த இரவும் போக்குவரத்து பஸ் சேவை நிறுத்தப்பட்டதால் பொதுமக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர். எனவே இச்சேவையை மீண்டும் பெற்றுத் தருமாறு எமது பிரதேச போக்குவரத்து சபைத் தலைவருக்கு 100 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.